# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில் நடைபெற்ற இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாம் காட்சிகள்!






முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழகத்தலைவர், முதலமைச்சர் முதல்வர் அவர்கள் கழக இளைஞர்களுக்கு இட்ட கட்டளைகளில் முக்கியமானது, 100 இளம் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்து தலைமையிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது. அதன்படி, தமிழ்நாடு முழுவதும் இளைஞரணி சார்பில் நடத்தப்பட்ட "என் உயிரினும் மேலான பேச்சுப்போட்டியின் மூலம் 183 இளம் பேச்சாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் உட்பட 200 இளம் பேச்சாளர்களை, திராவிட இயக்கத்தின் அடுத்தத் தலைமுறை பேச்சாளர்களாக உருவாக்கும் முயற்சியில் கழக இளைஞர்களின் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில் இரண்டு நாள் பயிற்சி முகாம் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. இம் பயிற்சி முகாமை 15.2.2025 அன்று காலை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து கருத்துரை வழங்கி சிறப்புரையாற்றினார். முன்னதாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழா அரங்கத்தில் அமைக்கப்பட்டு இருந்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.





கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில் கழக இளைஞர் அணி சார்பில் `பொய்ப் பெட்டி' நிகழ்ச்சி 15.2.2025 அன்று நடைபெற்றது. இளம் பேச்சாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாமில் `அரை உண்மைகளும் முழுப்பொய்களும்' என்னும் அமர்வில், கழகத் துணைப் பொதுச் செயலாளரும் மக்களவை உறுப்பினருமான ஆ.இராசா திராவிட இயக்கத்துக்கு எதிரான அவதூறுகளை முறியடிக்கும் வகையில், இளம் பேச்சாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு வரலாற்றுத் தரவுகளுடன் மிகச்சிறப்பாக பதிலளித்தார்.







என் உயிரினும் மேலான பேச்சுப் போட்டியில் தேர்வான இளம் பேச்சாளர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாமில் முதல் அமர்வாக, கழக மேடைகளில் கிடைத்த அனுபவங்களை மண்டலத்திற்கு ஒருவரென பகிர்ந்துகொண்ட, 'களம் புதிது' அனுபவப் பகிர்வு நிகழ்வு சுகுணா திவாகர் நெறியாளராக இருந்து சிறப்புடன் நடைபெற்றது.






கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட இளம் பேச்சாளர்களுக்கான இரண்டுநாள் பயிற்சி முகாமில் இளம் பேச்சாளர்களுக்கு சமூகவலைத்தளங்களின் முக்கியத்துவம் குறித்தும் அவற்றை எப்படி கையாள்வது என்றும் சூர்யா கிருஷ்ணமூர்த்தி 'லைக் மற்றும் ஷேர்' குறித்து சிறப்பாகப் பயிற்சியளித்தார்.







இளம் பேச்சாளர்களுக்கான இரண்டுநாள் பயிற்சி முகாமில் ஆயிரமாண்டுகால ஒடுக்குமுறையை வென்ற போராட்டத்தை விளக்கும்விதமாக நடைபெற்ற 'அசுரகீதம் நாடகம், 'திணை நிலவாசிகள்' நாடக குழுவினரால் நடத்தப்பட்டது. இந்நாடகம் எழுச்சி யுடன்கூடிய வரவேற்பைப் பெற்றது.